முச்சந்தி முரளி



"உயிர்ப்போட இருக்கிறது முக்கியமில்லை, பொறுப்போட இருக்கோணும் கண்டியளோ"

Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 232

திங்கட்கிழமை
15 ஜூலை 2024

ஆனி 31
வள்ளுவ



## துப்பாக்கி ரவைகள் மீட்பு

கிளிநொச்சி, ஜூலை 15

பூநகரி, சின்னப்பல்லவராயன் கட்டில் பாழடைந்த கிணற்றிலிருந்து துப்பாக்கி ரவைகள் நேற்றுமுன்தினம் இரவு மீட்கப்பட்டுள்ளன.

11



## பிரபாகரனைப்போன்று ரணிலும் குழப்பத்திலாம்

கொழும்பு, ஜூலை 15

கிளிநொச்சி வீழ்ச்சிக்குப் பின்னர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு அடுத்த கட்டம் குறித்து சிந்திப்பதற்கு அவகாசமில்லாமல் ஏற்பட்டிருந்த நிலைமையே தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஏற்பட்டுள்ளது என்று கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

அதாவது, ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் எடுக்கப்பட்ட அனைத்து செயற்பாடுகளும் எதிர்மறையான முடிவுகளை அளித்துள்ள நிலையில் அவரால் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பது குறித்து சிந்திப்பதற்கான அவகாசமற்ற நிலைமையே தற்போது ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-ஒ-இ)

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் முக்கியமான அறிவிப்பு நாளை

கொழும்பு, ஜூலை 15

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான விசேட அறிவிப்பை நாளை செவ்வாய்க்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிடவுள்ளது. இந்த அறிவிப்பு நாளை மு.ப. 10.30க்கு வெளியிடப்படவுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்தது.

11

## வடமாகாணப் பட்டதாரிகள் நாளை கவனவீர்ப்புப் போர்

யாழ்ப்பாணம், ஜூலை 15

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் கவனவீர்ப்பு போராட்டத்தை நாளை செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளவுள்ளனர். யாழ். மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-125)

## மக்கள் பிரதிநிதிகளுக்கு இறுதி எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 15

இதுவரை, தமது சொத்துகள், பொறுப்புகள் மற்றும் கடன்கள் தொடர்பான பிரகடனங்களைச் சமர்ப்பிக்காத அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்த மாதத்துக்குள் சமர்ப்பிக்கவேண்டும் என இறுதி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

11

## இந்திய உயர்மட்டக்குழு அடுத்த மாதம் வருகை

கொழும்பு, ஜூலை 15

இந்தியாவின் உயர்மட்ட பிரதிநிதிகள் குழு ஒன்று இலங்கைக்கு அடுத்த மாதம் வருகை தரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தால்

11



## முச்சக்கரவண்டி கட்டணம் குறைப்பு

கொழும்பு, ஜூலை 15

மேல் மாகாணத்தில் முச்சக்கர வண்டிகளின் பயணக் கட்டணம் இன்று முதல் குறைக்கப்படவுள்ளதாக முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார்.

11

## இலங்கைத் தமிழரசுக் கட்சி உயிர்ப்பாக இருக்கின்றது

### வழக்கு விவகாரத்தில் சுமந்திரன் விளக்கம்

வவுனியா, ஜூலை 15

இலங்கைத் தமிழரசுக் கட்சி உயிர்ப்போடு இருப்பதுடன், ஆக்கபூர்வமான பிரதிநிதிகளுடன் தொடர்ந்தும் பயணிக்கின்றது. மக்களுக்கான தனது செயற்பாட்டைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள

11

## தமிழ்த் தேசியப் பேரவை ஒப்பந்தம் புதனன்று?

யாழ்ப்பாணம், ஜூலை 15

தமிழ்த் தேசியப் பேரவையின் புரிந்துணர்வு உடன்படிக்கை நாளைமறுதினம் புதன்கிழமை கைச்சாத்தாகும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏழு தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும், சிவில் அமைப்புகளின் ஒன்றிணைவான தமிழ் மக்கள் பொதுச்சபையும் கூட்டிணைந்து தமிழ்த் தேசியப் பேரவை

11

## திருமலையில் விபத்து; யாழ்.வாசிகள் காயம்

திருகோணமலை, ஜூலை 15

அநுராதபுரம் - திருகோணமலை வீதியில் திருகோணமலை நோக்கி பயணித்த சொகுசுக் காரொன்று ஹொரவப்பொத்தான - யான் ஓயா பாலத்தின் பாதுகாப்பு வேலியில் மோதி நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளானதில் காயமடைந்த நால்வர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

11

## சிறுவர்களிடையே நோய்ப்பரவல்

### மருத்துவர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 15

சிறுவர்களிடையே ஆஸ்துமா உள்ளிட்ட சுவாசம் சார்ந்த நோய் நிலைமைகள் அதிகரித்து வருவதாக சிறுவர் மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இருமல், சுவாசிப்பதில் சிரமம், இருமலுடன் வாந்தி வெளியேறல் போன்றன இந்த நோயின் அறிகுறிகளாகும். நாட்டின் பல பகுதிகளில் தற்போது பரவிவரும் இன்புளுவென்சா வைரஸ் காய்ச்சலின் பின்னரும்

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# படுகொலைகள் பழிவாங்கும் படலமா?

## விசாரணைகளில் திடீர்த் திருப்பம்

கொழும்பு, ஜூலை 15

**இலங்கையில் பாதாள உலகக் குழுவினருக்கு இடையில் மோதல் நிலைமை தீவிரம் அடைந்துள்ள நிலையில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெறும் படுகொலையின் பின்னணியில் பழிவாங்கல் நடவடிக்கையே பிரதான காரணம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**



பாதாள உலகக் குழுவின் பிரதான தலைவர்களில் ஒருவராக மாகந்துரே மதூஷ் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நிலையில் சுட்டுக்கொலை செய்யப்பட்டிருந்தார்.

இதற்குப் பழிவாங்கும் வகையில் மதூஷ்க்கு எதிரானவர்களைக் கொலை செய்யும் வேலைத்திட்டம் ஒன்று வெளிநாட்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகின்றதாக அறியமுடிகின்றது.

படுகொலை செய்யப்பட்ட கிளப் வசந்த என அழைக்கப்படும் சுரேந்திர வசந்த பெரேராவின் இறுதிக்கிரியைகள் அவரது குடும்ப உறுப்பினர்களின் பங்கேற்புடன் பொரளை பொதுமயானத்தில் இடம்பெற்றது. இந்தநிலையில் மாகந்துரே மதுஷின் சடலம் புதைக்கப்பட்ட கொடிகமுவ பொது மயானத்துக்கு முன்பாக அவரது புகைப் படத்துடன் கூடிய பதாகை ஒன்று காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

அதில் "எங்கள் அண்ணனே ஒவ்வொருவராக அனுப்புகிறோம். நாங்கள் வரும் வரை பார்த்துக்கொள்ளுங்கள்" என பதாகையில் எழுதப்பட்டுள்ளது.

அதேவேளை மாகந்துரே மதுஷ் கைது செய்யப்படுவதற்கு பாதுகாப்புப் படையினருக்குத் தகவல் வழங்கிய முதல் நபரான கிளப் வசந்த கொல்லப்பட்டதாக இலங்கையின் மிக மோசமான குற்றவாளிகள் பட்டியலிலுள்ள கஞ்சிப்பான இம்ரான் தெரிவித்துள்ளதாக பொலிஸ் வட்டாரம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட விசேட குழு விசாரணைகளை துரிதப்படுத்தியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## கசிப்பு கைது தண்டம் ரூ. 1 இலட்சம்

யாழ்ப்பாணம் , ஜூலை 15

20 லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நபருக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடையவருக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு குறித்த இளைஞனை கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியபோதே ஒரு இலட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் தண்டப்பணம் செலுத்தத் தவறின் 8 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிவான் உத்தரவிட்டார். (ச-22,23)

## ஐ.ம.சக்தி கூட்டணி ஓகஸ்டில் பகிரங்கம்



யாழ்ப்பாணம், ஜூலை 15

ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்திய ஐக்கிய மக்கள் சக்தியைத் தலைமைத்துவமாகக் கொண்ட அரசியல் கூட்டணி குறித்து உத்தியோகபூர்வமாக எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி அறிவிக்கப்படவுள்ளது. கொழும்பில் பெரும் மாநாட்டை நடத்தி, இந்த அறிவிப்பு விடுக்கப்படவுள்ளது என எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியை தலைமைத்துவமாகக் கொண்டு பரந்துபட்ட அரசியல் கூட்டணிக்கான பேச்சுகள் முடிவுற்றுள்ளன.

தமிழ் மற்றும் முஸ்லிம் உள்ளிட்ட பல கட்சிகள் உள்ளடங்கலாக இந்த எதிர்க்கட்சியின் கூட்டணி அமையப்பெற்றுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

## வேட்பாளர் காத்திரமானவர்

### கூறுகிறார் நாமல்

கொழும்பு, ஜூலை 15

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொள்கைகளுக்கு இணங்குகின்ற வேட்பாளரை இம்மாத இறுதியில் அறிவிக்க உள்ளோம். வேட்பாளர் ஏற்கனவே அடிமட்ட ஒழுங்கமைப்பை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகிறார் என்று நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரை நியமிப்பதற்கு ஏன் தாமதம் ஏற்பட்டது என்பது தொடர்பில் கருத்து வெளியிடுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பொதுஜன பெரமுனவின் கட்டமைப்பும் வியூகமும் ஜனாதிபதி வேட்பாளரை 4 முதல் 6 வாரங்களுக்குள் வெற்றிபெறச் செய்யும் அளவுக்கு பலமாகவுள்ளன.

தேர்தல் அறிவிக்கப்பட்ட 4 முதல் 6 வாரங்களுக்குள் வேட்பாளரை வெற்றிபெறச் செய்ய முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## செயல்வீரர் ரணிலே!

### பிரசன்ன புகழாரம்



கொழும்பு, ஜூலை 15

நாட்டைக் கொண்டுநடத்த தேவையான நிதி ஏதும் இல்லாதபோது அந்தச் சவாலை ஏற்றுக்கொண்டு, பல்வேறு இக்கட்டான நிலைமைகளுக்கு மத்தியிலும் நாட்டின் திறைசேரியை ரூபாவாலும் டொலராலும் நிரப்பியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே.

இவ்வாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் துறைஅமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். எந்த அரசாக இருந்தாலும், இப்படியொரு சவாலை ஏற்க ரணிலைத் தவிர வேறு தலைவர் இல்லை. இரண்டாவது விடயம், ஒன்றுமில்லாதிருந்த திறைசேரியை நிரப்பி பணவீக்கத்தை 70 வீதத்திலிருந்து ஒற்றை இலக்கத்துக்குக் கொண்டு வந்தார். இது எளிதான காரியம் அல்ல. அதற்குச் சரியான அரசியல் தலைமை தேவை. இந்தச் சாதனைகள் அனைத்தும் கூட்டு முயற்சியின் பயன்கள் என்று அவர் எப்போதும் சொல்வார் எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## டிலான் பெரேரா கார் விபத்து மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா பயணித்த கார் விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்துள்ளனர்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கலனிகம பகுதியில் நேற்று இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் டிலான் பெரேராவுக்கு காயம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## 'அஸ்வெசும' கடன் திட்டம் இந்த மாதம் அறிமுகம்

கொழும்பு, ஜூலை 15

'அஸ்வெசும' கடன் திட்டமொன்று இந்த மாதம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்துள்ளார்.

தொழில் முயற்சி, விவசாயம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்பவற்றுக்காக விசேட முறைமையின்கீழ் கடன்கள் வழங்கப்படவுள்ளன.

அவை சமுர்த்தி அபிவிருத்தி வங்கியின் ஊடாகக் கையளிக்கப்படவுள்ளன.

நலன்புரித் திட்டங்கள் ஊடாக மாத்திரம் நாட்டை வளப்படுத்தமுடியாது.

சிறந்த உற்பத்திகள் மூலமாகவே நாட்டை அபிவிருத்தியடையச் செய்யமுடியும் என்பதற்காகவே இந்தக் கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகள் எதிர்பார்ப்பு!

## அமைச்சர் மனுஷ தெரிவிப்பு

**கிளிநொச்சி, ஜூலை 15**

**வெளிநாடுகளிலுள்ள தமிழ் புலம்பெயர்ந்தோர் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.**

இலங்கையை வளர்ந்த நாடாக மாற்றி அடுத்த தலைமுறைக்கு பலன் கிடைக்கும் வகையில் முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

-இவ்வாறு கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார அழைப்பு விடுத்துள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள பெரும்பாலான வர்த்தக நிறுவனங்கள் புலம்பெயர் நாடுகளைச் சேர்ந்தவை.

அந்தப் புலம்பெயர் மக்களை இங்கு வருமாறு அழைக்கிறோம்.

இங்கு காணிப்பிரச்சினைகள் தற்போது தீர்க்கப்பட்டு, நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்க்கப் போகும் சூழலை ரணில் விக்கிரமசிங்க உருவாக்கியுள்ளார்.

நாட்டுக்காக நாம் ஒன்றுபட வேண்டிய நேரம் இது. இனம், மதம், சாதி, கட்சிகளை ஒதுக்கி வைத்து, எமது நாட்டை கட்டியெழுப்பவேண்டிய நேரம் இது. எனவே ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்புமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

2048 ஆண்டுக்கு முன்னர் இலங்கையை வளர்ந்த நாடாக மாற்றி அடுத்த தலைமுறைக்கு பலன் கிடைக்கும் வகையில் முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் - என்றார். (ச-இ)

# இந்தியாவிலிருந்து இயற்கை எரிவாயு

கொழும்பு, ஜூலை 15

இலங்கை ஏற்றுக்கொண்ட இந்திய அரசாங்கத்தின் முன்மொழிவின் அடிப்படையில் இலங்கைக்கு ஒரு நாளைக்கு 40 கொள்கலன்கள் என்ற விகிதத்தில் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவை இந்தியா வழங்கவுள்ளது. இந்தியாவின் கொச்சி துறைமுகத்தில் இருந்து அனுப்பப்பட்டு, கெரவலப்பிட்டியவிலுள்ள இலங்கையின் மின்உற்பத்தி நிலையங்களுக்கு சாலை வழியாகக் கொண்டு செல்லப்படும். இந்தத் திட்டத்தின்படி இந்திய நிறுவனம், ஒரு நாளைக்கு 60- 70 கொள்கலன் அளவில் ஏற்றுமதியை விரிவுபடுத்த சாத்தியமுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)


# சீரற்ற காலநிலை சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 15

நிலவும் சீரற்ற வானிலை காரணமாக நாட்டின் பல பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 24 மணி நேரத்துக்கு பலத்த மழை வீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் சில இடங்களில் 100 மில்லி மீற்றரிலும் அதிகரித்த மழை வீழ்ச்சி பதிவாகக் கூடும்.

அதேவேளை, கண்டியில் நேற்று பெய்த பலத்த மழை காரணமாக கண்டி ரயில் நிலையம் உள்ளிட்ட பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இடியுடன் கூடிய மழை,பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ச-இ)



யாழ்.வலிகாமத்தின் பல பகுதிகளிலும் தற்போது சிறுபோக வெங்காய அறுவடை ஆரம்பமாகியுள்ளது. இந்நிலையில் வெங்காய விளைச்சல் இம்முறை அதிகரித்துக் காணப்படுவதாக விவசாயிகள் பலரும் தகவல் வெளியிட்டுள்ளனர். (ப-66)

## ஜனாதிபதித் தேர்தல்: ரூ. 10 பில். ஒதுக்கீடு

கொழும்பு, ஜூலை 15

ஜனாதிபதித் தேர்தலுக்காக 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது. ஜனாதிபதித் தேர்தல் செலவினங்களுக்காக தேவைப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிதியை விடுவிக்க இயலுமென நிதியமைச்சின் மூத்த பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நாளைமறுதினம் புதன்கிழமை வருகைதருமாறு நிதியமைச்சின் அதிகாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)


## சாவ. மருத்துவமனையில்

# செயல் நிலையில் மின்பிறப்பாக்கி

யாழ்ப்பாணம், ஜூலை 15

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் புதிய கட்டடத் தொகுதிக்கென நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் தற்காலிக ஏற்பாடாக வழங்கப்பட்ட மின்பிறப்பாக்கி நேற்று ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வமாக இயக்கப்பட்டது.

சாவகச்சேரியில் ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி தொடக்கம் மாலை 5மணி வரை மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையிலேயே மின்பிறப்பாக்கி இயக்கப்பட்டுள்ளது. (ச-27)



# தினம் தெரியுமோ?

ஒருத்தன்ர ஆசையைத் தூண்டினால் அவனை ஈஸியா ஏமாத்திப்போடலாம். அப்பிடி கனபேரின்ர ஆசையைத் தூண்டி தங்கட பொக்கெற்றை நிரப்பிறதுக்கெண்டே டிசைன் டிசைனா யோசிக்கிற காலம் இது. இப்பிடிப்பட்ட கலிகாலத்தில நாங்களும் அவதானமா இருக்கோனும். ஏமாந்த பிறகு குய்யோ முய்யோ எண்டு கத்தி ஒரு பிரியோசனமும் இல்லை. அப்பிடி யாழ்ப்பாணத்தில கனபேர் ஏமாந்துபோன இப்ப லேட்டஸ்ட்டா வந்திருக்கிற ஏமாத்துவேலை பற்றி சொன்னாத்தான் நீங்களும் அலேர்ட்டா இருப்பீங்கள்.

ரணிலின்ர அரசாங்கம் வந்தபிறகு எல்லாச் சாமான்களின்ர விலையும், எல்லாச் சேவையளின்ர கட்டணமும் கூடிக்கொண்டே போகுது. அப்பிடிக் கூடின ஒண்டுதான் கரண்ட் காசு. மடங்குக் கணக்கில கூடின கரண்ட் காசைக் கட்டுறதெண்டது இப்பத்தைச் சூழ்நிலையில சனத்துக்கு கடும் கஷ்டம் தானே. அதால என்ன வழிப்பட்டும் அதைக் குறைக்க வேணும் எண்டு, ஒவ்வொரு வழியா எல்லாரும் தேடிக்கொண்டிருக்கேக்கதான், யாழ்ப்பாணத்தில கொஞ்சப்பேர் "உங்களை மின்சாரக் கட்டணத்தில இருந்து மீட்க வந்திருக்கிறம்" எண்டு குதிச்சிருக்கினம். "பவர் சேர்வர் யுனிட்" எண்டொரு சின்னப்பெட்டி மாதிரி சாதனத்தை கொண்டந்து , அதை உங்கட வீட்டு மெயின் சுவிட்ச்சில பூட்டினால் கரண்ட் காசை 15 வீதத்தில இருந்து 35 வீதம் வரைக்கும் குறைக்கலாம்" எண்டு அவை முதல்ல சொல்லேக்கையே, அதைக் கேக்கிறவையின்ர வாய் விரியத் தொடங்கவே "எங்கட தந்திரம் வேலை செய்யத் தொடங்கிட்டுது" எண்டு தங்கட அடுத்த அம்பை எடுத்து எங்கட பக்கம் விடுவினம்.

"அண்ணை, இதின்ர விலை உண்மையா பதினையாயிரத்து ஐநூறு ரூபா. ஆனால இப்ப நாங்கள் ஒரு ஒ·பர் குடுக்கிறம். அதால வெறும் ஒம்பதாயிரத்து தொண்ணூறு ரூபா தான். இந்த மாதம் மட்டும் தான் இந்த ஒ·பர். உங்களைப் பார்த்தா பாவமாக் கிடக்கு. அதால எனக்கு கொமிசனா வாற காசையும் கழிச்சு, உங்களுக்கு எட்டாயிரத்து ஐநூறு ரூபாக்கு தரலாம். "இந்தக் காலத்தில தன்ர கொமிசன்காசைக்கூட எங்களுக்காக விட்டுத்தாற மனசு ஆருக்கு வரும்? அதுக்கு அங்கால நாங்கள் யோசிக்கமாட்டம். தவிச்ச முயலை அடிக்கவேண்டியதுதான். சுளையாக் காசை எடுத்துக்குடுத்திட்டு "பாத்தியளே, பதினையாயிரத்துச் சொச்சம் பெறுமதியான சாமானை எட்டாயிரத்து ஐநூறு ரூபாவுக்கே வாங்கிட்டன். இனி கரண்ட் காசும் மிச்சம் வரப்போகுது" எண்டு வீடு முழுக்க பீத்திக் கொண்டு திரிவம். ஆனால் அந்த பொக்ஸை பூட்டினால் கரண்ட் காசு கூடுமே தவிர குறையாது. ஏனெண்டால் அந்த பொக்ஸ் வேலை செய்யிறதுக்கும் கரண்ட் வேணும், அதால வழக்கத்தைவிட கூட கரண்ட் போகும். மற்றப்படி கரண்ட் பில் குறையும் எண்டு ஒவ்வொரு மாதமும் இலவு காத்த கிளிமாதிரி ஏமாந்தபடி இருக்கவேண்டியதுதான். தோசையின்ர திறத்தில ஆட்டுக்கல்லுக்கொரு மாலையாம் எண்ட மாதிரி, உந்த வீணாப் போன பொக்ஸ்'க்கு ரண்டு வருசத்துக்கு 'வொரண்டி' யும் இருக்காம். உந்த ஏமாத்துக்கார ஆக்கள் கொழும்பில இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து ஒப்பீஸ் போட்டு, வீடு வீடா ஆக்களை அனுப்பி தங்கட ஏமாத்துவேலையை இப்பவும் செய்து கொண்டிருக்கினம். "அண்ணை, என்ன உங்கட பொக்ஸைப் பூட்டியும் கரண்ட் பில் குறையேலை?" எண்டு கேட்டால், " அதெல்லாம் அடுத்தமாதம் தான் குறையும்" எண்டு ஒவ்வொரு மாதமும் பேய்க்காட்டுகினமாம். நீங்களும் இப்பிடி கரண்ட் காசைக் குறைக்கிறம் எண்டு ஆரும் ரிப்ரொப்பா வந்தால் கவனமா இருங்கோ. இப்ப வெள்ளையும் சொள்ளையுமா வாறவையிட்டத்தான் கடும் அவதானமா நடக்கோனும் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரத் தேர்கள் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய மஹோற்சவப் பெருவிழா இடம்பெற்று வரும் நிலையில் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு சித்திரத் தேர்களின் வெள்ளோட்ட நிகழ்வு எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை இடம்பெறவுள்ளது. தொடர்ந்து புதிய தேரில் வேகாவனப் பெருமான் வீதி வலம் வருவார். (ச-500)

## கசிப்புடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 15

750 மில்லிலீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் இளவாலை பொலிஸாரால் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

மாதகல், சகாயபுரம் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞரே இவ்வாறு சந்தேகநபராகக் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை இளவாலை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ப-125)



## யாழ்.மாவட்டத்தில் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ்.மாவட்டத்தில் முதலாம் தரம் முதல் 13 ஆம் தரம் வரை கல்வி பயிலும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தால் வழங்கப்படும் ஜனாதிபதி புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ்.தந்தை செல்வா கலையரங்கத்தில் நடைபெற்றது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விருந்தினராகக் கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

யாழ்.மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் இ.இளங்கோவன், ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன, யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபன், கல்வி அதிகாரிகள், பிரதேச செயலர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-66)

## இறுதிநிலை நோயாளர்கள் பராமரிப்பு இடைநிறுத்தம்

### நோயாளர்கள் அவதி

மன்னார், ஜூலை 15

இறுதிநிலை நோயாளர்கள் என்று சொல்லப்படுகின்ற புற்றுநோயாளர்கள், சிறுநீரக நோயாளர்கள் போன்றவர்களுக்கு மருத்துவத் தேவைகளுக்கான செலவுகளையும் அலைச்சல்களையும் குறைப்பதற்காக நோயாளர்களின் வீடுகளில் வழங்கப்பட்டு வந்த சிகிச்சைமுறை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று நோயாளர்களின் உறவினர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இறுதிநிலை நோயாளர்களாக இருப்பவர்களை மருத்துவமனைகளில் வைத்துப் பராமரிக்க முடியாதவர்களும் கிளினிக் போன்ற செயற்பாடுகளுக்கு வாகனங்களில் அழைத்துச்செல்ல வசதிகளற்ற பொருளாதாரம் நலிவுற்றோருக்கே இந்தச் சேவை வழங்கப்பட்டு வந்தது.

திடீரென இந்தச் சேவைகள் நிறுத்தப்பட்டதால் இறுதிநிலை நோயாளர்கள் மிகவும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து மீண்டும் மன்னார் மாவட்டத்தில் இறுதிநிலை நோயாளர் பராமரிப்பை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-213)

## சைவ அறங்காவல் கருத்தரங்கு யாழில்

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ்ப்பாணம் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவ மடத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற 'சைவ அறங்காவல்' என்ற பொருளில் அமைந்த முழுநாள் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள நட்சத்திர விடுதியில் நடைபெற்றது.

தென்னாடு அமைப்பின் நிறுவுநர் பொறியியலாளர் கு. பார்த்தீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தருமபுரம் ஆதீனத்தின் திருக்கேதீச்சரக் கிளை மட கட்டளை தம்பிரான் ஸ்ரீமத் மீனாட்சி சுந்தர தம்பிரான் சுவாமிகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி சிறீசற்குணராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் கருத்துரைகளை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன், கொழும்பு ஆறுமுகநாவலர் சபை செயலாளர் மருத்துவர் கி. பிரதாபன், சைவநீதி அமைப்பின் தலைவர் குணா துரைசிங்கம் ஆகியோர் வழங்கினர். (ச-66)





## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும். எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும். இளைய சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். தாயாரின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு பணவரவு இருந்தாலும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. குடும்ப விடயமாக முடிவு எடுக்கவேண்டி வரும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். சுபநிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகும். சிலருக்கு வீண் அலைச்சலுடன் உடல் அசதியும் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் கனிவான அணுகுமுறை அவசியம்.

**கடகம்:** மனதில் சோர்வு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதில் சில சிரமங்கள் ஏற்படும்.

**சிம்மம்:** உதவி .கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். வீண் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும். பேசும்போது பதற்றம் தவிர்ப்பது அவசியம். வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.

**கன்னி:** நீண்ட நாள்களாக நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்தி கிடைக்கும். மற்ற வர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம். காரியம் சாதகமாக முடியும். விநாயகர் வழிபாடு நலம் சேர்க்கும்.

**துலாம்:** திடீர் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உதவி கிடைக்கும். சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வியாபாரம் சுமாராகத்தான் இருக்கும்.

**தனுசு:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். வீட்டுப் பராமரிப்புப் பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். மனஸ்தாபம் நீங்கும். ஆஞ்சநேயரை வழிபட நன்மைகள் கூடுதலாகும்.

**மகரம்:** ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்யவேண்டாம்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு குடும்பம் தொடர்பான பணிகளுக்காக சற்று அலைச்சல் ஏற்படும். மனவருத்தங்கள் நீங்கும். வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.

**மீனம்:** மன உறுதியுடன் செயற்படுவீர்கள். செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். உடல் ஆரோக்கியத்திலும் கூடுதல் கவனம் செலுத்தவும். தட்சிணாமூர்த்தியை வழிபட தடைகள் விலகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பொதுவேட்பாளர் யார்?

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டு அது நடைபெறும் வரையில் மக்களுக்கு தேர்தல் மீதான நம்பிக்கையீனம் இருக்கச்செய்யும். அதை உறுதிப்படுத்தும் வகையில் மீண்டும் மீண்டும் 19ஆவது திருத்தத்துக்கு எதிரான வழக்குத் தாக்கல்களும், ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பான சட்டத்திருத்த முயற்சிகளும் இடம்பெறுகின்றன. சமநேரத்தில் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதற்கான வியூகங்களும் தென்னிலங்கையில் முழுவீச்சில் நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

தமிழர் தரப்பு இம்முறை ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் புதியதொரு அணுகுமுறையைக் கையில் எடுத்துள்ளது. தமிழ்ப்பொது வேட்பாளரைக் களமிறக்கி தமிழர்கள் முழுமையாக அவரை ஆதரிப்பது என்ற கொள்கை முடிவு தமிழ்த் தேசியக் கட்சிகளாலும் சிவில் அமைப்புகளாலும் எடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அதை மக்கள் மத்தியில் கொண்டு சென்று சேர்ப்பதற்கான வேகம் தான் போதாமல் உள்ளது. ஏனெனில் இதுவரை காலமும் தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தல்களில், யார் குறைந்தளவு சேதத்தை உருவாக்குவார் என்ற ஒப்பீட்டு அடிப்படையில் கணித்து, ஏதேனுமொரு சிங்கள வேட்பாளர்களுக்கே வாக்களித்து வந்திருந்தனர். அதிலிருந்து மாற்றத்தை ஏற்படுத்தவேண்டுமாயின் மக்களைத் தெளிவுபடுத்தவேண்டும். தமிழ்ப் பொது வேட்பாளரை தமிழ் மக்கள் ஏன் ஆதரிக்கவேண்டும் என்பதை அவர்களை உணரச்செய்யவேண்டும். போரின் பின்னரான கடந்த காலங்களிலும் ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தலிலும் தமிழ் வேட்பாளராக சிவாஜிலிங்கம் போட்டியிட்டிருந்தார். அப்போதெல்லாம் அவரை ஆதரிக்காமல், சிங்கள வேட்பாளரை ஆதரிக்குமாறு கூறியிருந்தமையால், இப்போது தமிழ்ப் பொதுவேட்பாளரை களமிறக்கும்போது மக்கள் மத்தியில் எழும் சந்தேகங்களை தீர்க்கவேண்டும். ஆனால் தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிக்கும் அரசியல் தரப்புகளோ அல்லது சிவில் அமைப்புகளோ இதை முழுவீச்சில் இதுவரை செய்யவில்லை. இறுதி நேரத்தில் மக்களிடத்தில் மாற்றத்தை ஏற்படுத்த இயலாது. அதை இப்போதே திட்டமிட்டு முன்நகர்த்த வேண்டும்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் யார் என்பதையும் மக்களுக்கு வெளிப்படுத்தவேண்டிய சூழல் ஏற்பட்டிருக்கின்றது. ஏனெனில் தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற கொள்கை நிலைப்பாட்டை மலினப்படுத்த விரும்புகின்ற தரப்புகள் எல்லாம், இவர்தான் அடுத்த பொது வேட்பாளர் என்று கூறி அதை ஒரு கோமாளிக்கூத்தாக்க முயற்சிக்கின்றன. அது தமிழ் மக்களிடத்தே பிழையான விம்பத்தை உருவாக்கிவிடும். எனவே தமிழ்ப் பொதுவேட்பாளர் களமிறக்கம் தொடர்பான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள தரப்புகள் இது தொடர்பில் கூடுதல் அவதானம் செலுத்தவேண்டும்.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால் ஜனாதிபதியாக யார் வரவேண்டும் என்பதை இலங்கையைச் சுற்றி பூகோள அரசியல் மோதலில் ஈடுபடும் தரப்புகளே தீர்மானிக்கும் சக்திகளாக இருந்தன, இருக்கவும் போகின்றன. அந்தச் சக்திகளைப் பொறுத்தவரையில் தமிழ்ப் பொதுவேட்பாளர் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக இருக்கக்கூடும். எனவே பொது வேட்பாளர் முயற்சியை நீர்த்துப்போகச் செய்வதற்கான நகர்வுகளை அந்தத் தரப்புகளும் முன்னெடுக்கலாம். தமிழ்ப் பொதுவேட்பாளர் விவகாரத்தை முன்னெடுக்கும் தரப்புகளுக்கு அழுத்தங்களையும் அவர்கள் பிரயோகிக்கக்கூடும்.

எனவே, தமிழ்ப் பொதுவேட்பாளரை தமிழ் மக்கள் ஏன் ஆதரிக்கவேண்டும் என்பதையும், தமிழ்ப் பொதுவேட்பாளர் யார் என்பதையும் தமிழ் மக்களுக்கு நேர காலத்துடன் அறிவிப்பதே பொருத்தமாக இருக்கும்.



ஜனாதிபதியால்

# 1,16,000 மாணவர்களுக்கு 2024 இல் புலமைப்பரிசில்

கொழும்பு, ஜூலை 15

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவின்படி, பாடசாலை மாணவர்களின் கல்வியை மேம்படுத்த நடைமுறைப்படுத்தப்படும் 'ஜனாதிபதி புலமைப்பரிசில்' திட்டத்தின் கீழ் 2024ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து 16 ஆயிரம் மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.**

க.பொ.த. உயர்தரம் கற்கும் 6 ஆயிரம் மாணவர்களுக்கு மாதாந்தம் 6 ஆயிரம் ரூபா வீதம் 24 மாதங்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் திட்டத்துக்காக824 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தரம் ஒன்று முதல் 11 வரையான ஒரு இலட்சம் மாணவர்களுக்கு மாதாந்தம் 3,000 ரூபா வீதம் 12 மாதங்களுக்கு புலமைப் பரிசில் வழங்கவிருப்பதோடு அதற்காக 3,600 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போது செயற்படுத்தப்படும் புலமைப்பரிசில் திட்டங்களுக்கு மேலதிகமாக இந்தத் திட்டத்தில் 5,000 மில்லியன் ரூபாவுக்கு அதிகமான தொகை மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# கல்வியியற் கல்லூரி உள்வீர்ப்பு அதிகரிப்பு?

கல்வியியற் கல்லூரிகளை பல்கலைக்கழகங்களாக மாற்றுவதுடன் அதன்மூலம் கல்வியியற் கல்லூரிகளில் இணையும் 5,000 மாணவர்களின் எண்ணிக்கையை 7,500 ஆக அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார். நாட்டிலுள்ள 19 கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறதுஅவர் தெரிவித்தார். (ச-இ)

# தொழில்நுட்ப பரீட்சை பெறுபேறு வெளியீடு

கொழும்பு, ஜூலை 15

பொதுத் தகவல் தொழில்நுட்ப பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளன. 2019, 2020, 2021, 2022 (2023) ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற பரீட்சைகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன என பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான WWW.DOENETS.LK மற்றும் WWW.RESULTS.EXAMS.GOV.LK ஆகிய இணையத்தளங்களுக்குள் பிரவேசித்து பெறுபேறுகளை பார்வையிட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# பொலிஸார் வலைவீச்சு

இன்டர்போல் தேடுதலிலுள்ள 45 இலங்கை குற்றவாளிகள் வெளிநாடுகளில் பெரும்பாலும் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்திலிருந்து இலங்கையில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர்களை பொறியில் சிக்கவைத்து கொண்டுவருவதற்கான நடவடிக்கையை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. (ச-இ)

# 'யுக்திய' 750 பேர் கைது

கொழும்பு, ஜூலை 15

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் போது 750 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 274 கிராம் 232 மில்லிகிராம் ஹெரோய்ன், 272 கிராம் 799 மில்லிகிராம் ஐஸ், 89,240 கிராம் 325 மில்லிகிராம் கஞ்சா, 6,327 போதை மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## நாளை

16.07.2024

செவ்வாய்க்கிழமை - ஆனி - 32

சுபநேரம் : 10.30 - 12.00

ராகுகாலம் : 03.00 - 04.30

## நாளொரு நல்வார்த்தை

**மாண்போடு வாழ அனுமதிக்காத சமூகம் மாண்போடு சாகவும் விடாது.**

*- மல்கம் எக்ஸ் -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கரைச்சிக் கோட்ட விளையாட்டு விழா

கிளிநொச்சி, ஜூலை 15

கரைச்சி கல்விக் கோட்ட விளையாட்டு விழா, கிளிநொச்சி றொட்ரிக்கோ மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கரைச்சி கல்விக் கோட்டப் பணிப்பாளர் சு.தர்மரட்ணம் தலைமையில் நடைபெற்ற போட்டிகளில் 42 பாடசாலைகள் பங்குபற்றின. போட்டியில் ஏ.பி.சி தர மாணவர்களுக்கான போட்டியில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி முதலாம் இடத்தையும், தரம் 11 மாணவர்களுக்கான போட்டியில் கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயமும், பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் அனைத்துப் பிரிவிலும் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி முதலாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. (ப-13)



சாவகச்சேரி வாரிவனநாதர் சிவன்கோவில் வருடாந்த மஹோற்சவத்தின் சப்பரம், பூங்காவனம் திருவிழாவின் திருக்கல்யாண நிகழ்வு என்பன அண்மையில் இடம்பெற்றன. (ப-9)



# மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டி

கிளிநொச்சி, ஜூலை 15

முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரிக்கு நீண்ட தூரம் நடந்து வரும் மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டி வழங்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக 6 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. இதற்கான அனுசரணையை பிரான்ஸில் வாழும் செல்லத்துரை செல்வநாயகம் வழங்கியிருந்தார். (ப-13)





# செஞ்சிலுவைச் சங்கத்தால் கற்றல் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 15

இலங்கை செஞ்சிலுவைச் சங்க தெல்லிப்பழைக் கிளையால் மீள்குடியேறிய, பலாலி வடக்கு அ.த.க. பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றன. பிரிவுத் தலைவர் சி.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் குடும்பத் தலைவர்கள், பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்ட மிகவும் வறிய இரண்டு குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (ப-9)



# விவசாய முனைவோர் கிராமம் அங்குரார்ப்பணம்

மன்னார், ஜூலை 15

முசலி பிரதேசத்தில் இளைஞர் விவசாய தொழில் முனைவோர் கிராமம், இராஜாங்க அமைச்சர் கே.கே. மஸ்தானால் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைவாகவும், விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவின் கருத்திட்டத்துக்கு அமைவாகவும், முசலி பிரதேச செயலர் பிரிவிலுள்ள பாலைக்குளி கிராமத்தில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் விவசாயத்திணைக்கள அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், கிராம அலுவலர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-56)



குருநாகல் மாவட்டத்தின் பிங்கிரிய பிரதேசத்தில் ஏற்றுமதி அபிவிருத்தி வலயம் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் கலந்துகொண்டார். (ச)

யாழ்.புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி மாணவர்களுக்குத் தொழில் திறவுகோல் பரீட்சையுடனான தொழில் வழிகாட்டல் செயலமர்வு, கோப்பாய் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தரால் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது. (ப-66)





கிளிநொச்சி, ஆனந்தபுரம் மீனாட்சி அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பஞ்சபுராணம் ஓதுதல் போட்டியில், சசிறதன் அபிராம் முதலாம் இடத்தை பெற்று சான்றிதழையும் பெற்றுக்கொண்டார். (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ட்ரம்ப் மீதான துப்பாக்கிச் சூடு வெளியாகின பல தகவல்கள்!

நியூயோர்க், ஜூலை 15

**தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின்போது அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட நபர் தொடர்பான தகவல்களை எவ்.பி.ஐ. வெளியிட்டுள்ளது.**

20 வயதுடைய தோமஸ் மத்தியு குருக்ஸ் என்பவரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டார். அவர் சம்பவம் இடம்பெற்ற பென்சில்வேனியாவின் பட்லரிலிருந்து 70 கிலோமீற்றர் தொலைவில் உள்ள பெத்தெல் பூங்காவை என்ற பகுதியைச் சேர்ந்தவர்.

மத்தியு குருக்ஸ் இரகசிய சேவைப்பிரிவைச் சேர்ந்தவர்களால் உடனடியாக சுட்டுக்கொல்லப்பட்டார். இவர் குடியரசுக்கட்சியின் ஆதரவாளராக தன்னைப் பதிவு செய்து கொண்டவர். ஜனநாயகக் கட்சியுடன் இணைந்து செயற்படும் குழுவுக்கு சிறியளவு நிதியை வழங்கியுள்ளார் என்பது பொதுஆவணங்களின் மூலம் தெரியவந்துள்ளது. இம்முறையே அவர் முதல்தடவையாக ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கவிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-இ)

## பாடசாலைக் கட்டடம் இடிந்ததில் 22 பேர் பலி!

லண்டன், ஜூலை 15

நைஜீரியாவின் ஜோஸ் நகரில் தனியார் பாடசாலை ஒன்றின் மாடிக்கட்டம் இடிந்து வீழ்ந்ததில் 22 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்டோரை இடிபாடுகளில் இருந்து உள்ளூர் மக்களும், மீட்புப் படையினரும் இணைந்து மீட்டுள்ளனர்.

கட்டடம் இடிந்து வீழ்ந்தபோது 150 க்கும் மேற்பட்ட மாணவர்கள் இடிபாடுகளில் சிக்கியிருந்தனர் என்று அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர். காயமடைந்த மாணவர்கள் அனைவரும் அருகில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

தரக்குறைவான கட்டுமானப் பொருள்கள், மோசமான பராமரிப்பு போன்றவையே இத்தகைய அசம்பாவிதங்களுக்குப் பெரும்பாலும் காரணம் என்று அதிகாரிகள் கூறியுள்ளனர். (ஏ-இ)

## ட்ரம்ப் மீதான தாக்குதல் மன்னிக்க முடியாதது!

### ஆஸி. பிரதமர் தெரிவிப்பு

சிட்னி, ஜூலை 15

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மீதான தாக்குதல் மன்னிக்க முடியாதது என்று அவுஸ்திரேலிய பிரதமர் தெரிவித்துள்ளார். ஜனநாயக செயற்பாடுகளில் வன்முறைக்கு இடமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இவ்வாறான சம்பவங்கள் அதிகரிக்கலாம். அதனை எந்தத் தயக்கமும் இன்றி எதிர்க்கவேண்டும். நாங்கள் விவாதத்தின் உணர்ச்சியின் அளவைக் குறைக்கவேண்டும். சொல்லாட்சியை அதிகரிப்பதன் மூலம் எந்தப் பயனும்கிட்டப் போவதில்லை - என்றார். (ஏ-இ)



## கைதிகளை விடுவிக்கிறது பிரிட்டனின் புதிய அரசு

லண்டன், ஜூலை 15

பிரிட்டனில் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள தொழிற்கட்சி, சிறைகளில் கூட்ட நெரிசலைத் தவிர்க்க ஆயிரக்கணக்கான கைதிகள் விடுவிக்கப்படுவர் என்று அறிவித்துள்ளது.

கடந்த 14 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த கன்சர்வேட்டிவ் கட்சி சிறைகளைக் கண்டுகொள்ளவில்லை என்றும் அவற்றுக்குப் போதுமான நிதியை ஒதுக்கவில்லை எனவும் புதிய பிரதமர் கியர் ஸ்டாமர் தலைமையின்கீழ் செயற்படும் தொழிற்கட்சி கடந்த காலத்தில் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியிருந்தது.

பிரிட்டனில் உள்ள சில சிறைச்சாலைகள் மிகவும் பழமைவாய்ந்தவை என்றும் அவை மிகவும் மோசமான நிலையில் உள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

"சிறைகளில் அளவுக்கு அதிகமான கைதிகள் உள்ளனர். தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்த முதல் ஒரு வாரத்திலேயே புதிய சிறைச்சாலை ஒன்றைக் கட்டிமுடிக்க முடியாது. இதற்கான நீண்டகால தீர்வு அவசியம்" என பிரதமர் ஸ்டாமர் கூறியுள்ளார்.

கியர் ஸ்டாமரின் இந்த அறிவிப்பால் விடுதலையாகவுள்ள கைதிகள் மகிழ்ச்சியடைந்துள்ளதுடன், பிரதமருக்கு நன்றியும் தெரிவித்துள்ளனர். (ஏ-இ)



## இரு விண்மீன் திரள்களின் படத்தை வெளியிட்ட நாஸா

நியூயோர்க், ஜூலை 15

இரு விண்மீன் திரள்களின் படங்களை வெளியிட்டுள்ளது விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாஸா.

அமெரிக்க விண்வெளி நிலையமான நாஸா, 2021ஆம் ஆண்டு விண்வெளியில் நிகழும் மாற்றங்களை படம் பிடிப்பதற்காக ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியை விண்ணுக்கு அனுப்பியது.

ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியின் முதல் படங்கள் வெளியாகி இரண்டு வருடங்கள் முழுமையடைந்ததைக் குறிக்கும் வகையில் நாஸா புதிய படத்தை வெளியிட்டுள்ளது.

பென்குயின் மற்றும் எக் என அழைக்கப்படும் இரு விண்மீன் திரள்கள் 326 மில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் ஹைட்ரா விண்மீன் தொகுப்பில் அமைந்துள்ளதையே ஜேம்ஸ் வெப் படம்பிடித்துள்ளது.

இந்த இரண்டு விண்மீன் திரள்களும் கோடிக்கணக்கான நட்சத்திரங்களின் தொகுப்பாகக் காணப்படுகின்றன. (ஏ-இ)

## ஹமாஸின் தளபதிக்காக இஸ்ரேல் கொடும் தாக்குதல்

லண்டன், ஜூலை 15

ஹமாஸின் இராணுவத் தளபதியை இலக்குவைத்து காஸா மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் சுமார் 71 பலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஹமாஸின் இராணுவத் தளபதி மொஹமட் டெய்ப்மீது இலக்குவைத்து இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. ஆயினும் அவர் உயிரிழந்தாரா என்பது தொடர்பான தகவல்கள் வெளியாகவில்லை.

தெற்கு நகரமான கான் யூனிஸுக்கு மேற்கே இஸ்ரேலால் அறிவிக்கப்பட்ட மனிதாபிமான மண்டலமான அல்மவாசியில் உள்ள கட்டடத்தில் டெய்ப் பதுங்கியிருந்தார் என்று இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேவேளை, இஸ்ரேல் மீதான ஹமாஸின் தாக்குதலில் இவர் முக்கியமான பங்கு வகிக்கும் டெய்ப், 7 தடவைகள் இஸ்ரேலிய கொலைமுயற்சிகளில் இருந்து தப்பியுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. பல தசாப்தங்களாக இஸ்ரேலின் மிகவும் தேடப்படும் பட்டியலில் மொஹமட் டெய்ப் முதலிடத்தில் உள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகன இலக்கத்தகடு பட்டியல் பார்வைக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 15

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத் தலைமை அலுவலகத்திலிருந்து கடந்த மூன்றாம் திகதி யாழ். மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்கள அலுவலகத்துக்கு வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல் கிடைக்கப்பெற்றுள்ளது. இந்தப் பட்டியல், யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் மாவட்டச் செயலகத்திலுள்ள மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள், வாகனப் பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத் தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் என்பவற்றையும் சமர்ப்பித்து தங்கள் வாகனத்துக்குரிய இலக்கத் தகடுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# ரணில் பலமடைய களத்தில் பிரதமர்



கொழும்பு, ஜூலை 15

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் ஆதரவைப் பெற்றுக்கொடுப்பதற்குரிய நடவடிக்கையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன இறங்கியுள்ளார் எனத் தெரியவருகின்றது.

தமது கட்சிக்கு வழங்கிய வாக்குறுதிகளை ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்றாததால் அவருக்கு ஆதரவளிக்கக்கூடாதெனவும் ஜனாதிபதித் தேர்தலில் தம்மிக்க பெரேராவை களமிறக்கவேண்டும் எனவும் மொட்டுக் கட்சிக்குள் கோரிக்கைகள் எழுந்துள்ளன.

இந்த நிலையிலேயே தம்மிக்க பக்கம் சாயாது, மொட்டுக் கட்சியை ரணில் பக்கம் சாயவைப்பதற்குரிய அரசியல் நகர்வுகளில் பிரதமர் ஈடுபட்டுள்ளார்.

அதன் ஓர் அங்கமாகவே மொட்டுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் அவர் அண்மையில் பேச்சு நடத்தியுள்ளார் என்றும் தெரியவருகின்றது. (ச-44)


## மணிவிழா வாழ்த்துக்கள்

### திருமதி. செல்வலட்சுமி புவனேந்திரராசா
### SLTS 2 - II, BA, PGDE, Dip.in.HRM





**சேவை விபரம்**

1. யா/ ஊரெழு கணேசா வித்தியாலயம் 2009.11.16 -2012.05.13
2. ஆசிரியர் கலாசாலை, கோப்பாய் 2012.05.14 - 2014.05.10
3. யா/ புன்னாலைக் கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயம் 2014.05.16 - 2022.05.28
4. யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் 2022.05.29 - 2024.07.14

எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வுபெறும் மதிப்பிற்குரிய ஆசிரியை **திருமதி. செல்வலட்சுமி புவனேந்திரராசா** அவர்களின் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டி வாழ்த்துவதில் எமது பாடசாலைச் சமூகம் பெருமையடைகின்றது.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்

**யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்**

(cr. 38898) (2.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 17 . 05 . 1940 | 15 . 07 . 2023 |

### அமரர் நீக்கிலாப்பிள்ளை வென்சஸ்லஸ் தங்கராஜா

அன்பிற்குரிய அப்பாவே
அன்பும் பண்பும் அறிவும் நிறைந்த
புன்னகையின் புகலிடமே உம்மருகில்
நாம் வாழும் பாக்கியத்தை இழந்துவிட்டோம் அப்பா!

பாசத்தின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய்
எங்களுக்கெல்லாம் அன்புக் காட்டி
அரவணைத்த எங்கள் அன்பு தெய்வமே அப்பா!
உங்களை காண உங்கள் குரல் கேட்க
மனம் ஏங்கித் தவிக்கின்றது

உங்கள் புன்னகை பூத்த நல்லமுகம் மறைந்தது என்று
நம்ப முடியவில்லை அப்பா
எம் சோகத்தைத் தாங்கமுடியவில்லை அப்பா!

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகி போனாலும்
எங்கள் முன்னே என்றும் உங்கள் முகம் உயிர்வாழ்கிறது

"அப்பா அப்பா" என்று என் நா அழைக்கிறது
ஆனாலும் உங்களை காணமுடியவில்லை அப்பா
என்னை கண்ணைப்போல காத்து,
பண்போடு வளர்த்து, நற்கல்வியிலும், நல்வாழ்வும்
தேடித்தந்த எங்கள் ஒளிவிளக்கே அப்பா!

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும்,
எங்களின் ஒவ்வோரு அசைவிலும்
வாழ்ந்து கொண்டு இருப்பீர்கள் அப்பா

ஆண்டு ஒன்று சென்றாலும்
உங்கள் திருமுகம்
எங்களை விட்டு என்றும் நீங்காது...
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

8A, குருசோ வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(cs.55675) (N-1)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ -து)

### கூட்டுறவு தொழில் வங்கி (Coop Job Bank)

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையினால் யாழ். மாவட்டத்திலுள்ள கூட்டுறவு அமைப்புக்களில் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் பொருட்டு தொழில் வங்கி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு அமைப்புகளில் பொதுமுகாமையாளர் பதவி தொடக்கம் பல்வெறு முகாமைப் பதவிகளுக்கும் ஏனைய மேற்பார்வை செயற்பாட்டுமட்ட பதவிகளுக்கும் இத்தொழில் வங்கியூடாக எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளது.

**சம்பள விபரம்:**
கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்பட்ட அடிப்படைச் சம்பளம், சம்பள அதிகரிப்புக்கள், விசேட படி, வாழ்க்கைச் செலவுப்படி (7800.00) மற்றும் ஊக்குவிப்புப் படிகள் உட்பட பெற்றுக்கொள்ள முடியும்.

**ஏனைய வரப்பிரசாதங்கள் :**
ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி, பணிக்கொடை, கூட்டுறவு ஊழியர் நலநோன்பு நிதி, வாழ்க்கைத் தள்ளுபடி ஆகிய கொடுப்பனவுகளும், சட்டரீதியான லீவுகளும் உரித்துடையதாகும்.

**விண்ணப்பிக்கும் முறை:**
உரிய விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:**

**செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம் கட்டடத் தொகுதி 2 ஆம் மாடி, இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

செயலாளர்,
யா.மா.கூ.சபை.

(cr.42813) (N-1)

## மரண அறிவித்தல்



| உருவாய் | அருவாய் |
|---|---|
| 02 . 04 . 1947 | 13 . 07 . 2024 |

### அமரர் திருமதி இராஜேஸ்வரி செல்வரட்ணம்

யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ராஜேஸ்வரி செல்வரட்ணம் கடந்த சனிக்கிழமை 13.07.2024 அன்று காலமானார்.

அன்னார் செல்வரட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நரசிங்கம்-ராசம்மா தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான கோப்பாய் தெற்கு கும்பப்பிள்ளையைச் சேர்ந்த செல்லையா-வள்ளியம்மை தம்பதியினரின் பாசமிகு மருமகளும் செல்வமுரளி, ரஜனி (கலாசார உத்தியோகத்தர்-பிரதேச செயலகம்-சண்டிலிப்பாய்), செல்வமோகன் (பொறியியலாளர்-அமெரிக்கா), செல்வஜிந்தன் (அலுவலகப் பொறுப்பாளர், போதனாசிரியர்-தொழிற்பயிற்சி அதிகார சபை-சம்பூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நளாயினி, மேஜர்.நா.நரேந்திரா (அலுவலகப் பொறுப்பாளர்-தேசிய இளைஞர் படையணி-முல்லைத்தீவு, ஆசிரியர்-யாழ்ப்பாணம் கொக்குவில், இந்துக் கல்லூரி), டனிஷா, ஷஜீவினி ஆகியோரின் மாமியாரும் செந்துஜி, பிரவீனா, பிருந்தாபன், பிரதீபன், பிரசாந்தினி, பிரசாந்தன், செந்துஜன், செந்தீபன் ஆகியோரின் பாசமிகு பாட்டியும் காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்

அன்னாரின், இறுதிக்கிரியைகள் நாளை (16.07.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில், இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இராஜேஸ் பவனம்
பிறவுன் வீதி, கொக்குவில் கிழக்கு
கொக்குவில், யாழ்ப்பாணம்

தகவல்: குடும்பத்தினர்.
076 466 9188

(CS 943) V-1


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



பாடசாலை மாணவர்களுக்கு ஜனாதிபதி புலமைப் பரீட்சை வழங்கும் திட்டம் கிளிநொச்சியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. வடக்கு கல்வி வலயத்துக்கான நிகழ்வில் விருந்தினர்களாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ், ஜனாதிபதியின் வடக்குக்கான சிரேஷ்ட மேலதிக செயலாளர் சமன் பந்துலசேன, வடமாகாண ஆளுநரின் செயலாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-113)

# கடல் வளங்கள் சூறையாடலால் குறைகின்றது கடலுணவு நுகர்வு

## யாழ்.கடற்றொழில் சமாச முன்னாள் தலைவர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஜூலை 15**

**நாட்டில் தனிமனிதன் ஒருவருடத்தில் உட்கொள்ளும் கடல் உணவு குறைவடைந்து செல்லும் நிலை ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது. கடலட்டைப் பண்ணைகளின் வரவு, கடல் வளங்களில் ஆக்கிரமிப்பு ஆகியவையே இதற்கு வழிகோலுகின்றது.**

-இவ்வாறு யாழ் .மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத்தின் முன்னாள் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்துள்ளார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வடக்கு மாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிதிகளுக்கும் துறைசார்ந்த நிபுணர்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

2015 ஆம் ஆண்டு ஆய்வுகளின் பிரகாரம் ஒரு வருடத்தில் தனி மனிதன் ஒருவன் 31 கிலோ கடலுணவை விலங்குப் புரதமாக உட்கொண்டிருக்கிறான்.

ஆனால், 2023 ஆம் ஆண்டு ஆய்வுகளின் பிரகாரம் தனி மனிதனொருவன் ஒருவருடத்தில் 18 கிலோ கடலுணவை உட்கொண்டிருப்பது ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

கடலுணவு எமது சமூகத்திடையே குறைந்த செல்வதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்ற நிலையிலும் கடல் அட்டைப் பண்ணைகளின் திடீர் வரவு மீன் இனங்களின் உற்பத்திக்கு பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்துகிறது.

அத்துடன் கடலுணவுகள் வெளிநாடுகளுக்கு ஒருகிலோ மீன் 6 டொலருக்கு விற்பனை செய்யப்படுகிறது. எனவே பொருளாதார நிபுணர்கள் இது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு எதிர்காலத்தில் கடலுணவை உட்கொள்ளும் அளவை அதிகரிப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பது தொடர்பில் தெளிவுபடுத்தவேண்டும் - என்றார். (ச-125)

# மாந்தை மேற்கில் கடல்வளம் அழிப்பு

## மாந்தை கடற்றொழில் சங்க சமாசத் தலைவர் ஆதங்கம்

கிளிநொச்சி, ஜூலை 15

மாந்தை மேற்கில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக அதிகரித்து வருவதுடன் பல்தேசிய நிறுவனங்களுக்கு எமது கடல் வளம் சூறையாடப்படுவதற்குரிய முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று மாந்தை மேற்கு கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் அல்போன்ஸ் டேவிட் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாந்தை மேற்கில் சட்டவிரோத இறால் கூட்டுப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. பல்தேசிய நிறுவனங்களுக்கு எமது கடல் வளம் சூறையாடப்படுவதற்குரிய முயற்சிகள் இடம்பெறுகின்றன. இதனால், கடல் தாவரங்கள் அழிக்கப்பட்டு மீன்கள் தங்கி வாழுகின்ற உயிரியல் முறை அழிக்கப்படுகின்றது. இந்த சட்டவிரோத இறால் பண்ணைகளால் கடல் வாழ் உயிரினங்கள் வாழும் சூழல் அற்றுப்போகின்றது. எதிர்வரும் காலங்களில் இவ்வாறான சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். மீனவர்களுடைய வாழ்வாதாரத்துக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படுத்தப்படாத திட்டங்கள் நடைமுறைப் படுத்தவேண்டும் - என்றார். (ப-125)

# தாய்லாந்து செல்ல விசா இனியில்லை

கொழும்பு, ஜூலை 15

இலங்கை உட்பட 93 நாடுகளைச் சேர்ந்த பயணிகளுக்கு விசா இன்றி தாய்லாந்துக்கு நுழைய இன்று அனுமதி அளிக்கப்படும் என்று அந்நாட்டு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். தாய்லாந்தின் உள்துறை அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்ட இந்த புதிய கொள்கை, விசா இல்லாத தங்கும் நேரத்தை 30 முதல் 60 நாட்களுக்கு நீடிக்கிறது. இந்த மாற்றம் சுற்றுலாப் பயணிகளுக்கும் குறுகியகால வணிகப் பயணிகளுக்கும் பயனளிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# உயர்தர மாணவருக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 15

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பௌதிக விஞ்ஞான மற்றும் உயிரியல் விஞ்ஞானப் பிரிவுகளில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத்தினால் அறிவகம் தமிழ்க்கல்வி நடுவம் கனடாவின் அனுசரணையுடன் நடத்தப்பட்டு வருகின்றது.

இதன் இரண்டாவது அமர்வு எதிர்வரும்20 ஆம் திகதி சனிக்கிழமை காலை08.30 மணி முதல் முல்லைத்தீவுப் பாடசாலை மாணவர்களுக்கு இடம்பெறவுள்ளது. முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி, மல்லாவி மத்திய கல்லூரி, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் வழிகாட்டல் கருத்தரங்கு இடம் பெறவுள்ளன. (ச-66)




# சத்துணவுத் திட்டம்

மந்தபோஷாக்கினால் பாதிக்கப்பட்ட ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் திட்ட நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் சுன்னாகம் உப அலுவலக மண்டபத்தில் வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் சுன்னாகம் உப அலுவலகப் பொறுப்பதிகாரி திருமதி கௌரி விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. (ச-66)

# மாணவன் கௌரவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 15

ஒலிம்பிக் போட்டியில் பங்கு கொள்வதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள கிளிநொச்சி மத்திய கல்லூரி உயர்தர கணிதப்பிரிவைச் சேர்ந்த மாணவன் கோ.சரித்திரனுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு, கல்லூரியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ப-13)





ஏழாலை சொர்ணாம்பிகை சமேத அம்பலவாணேசுவரர் ஆல்ய தேர்த்திருவிழா மிகச்சிறப்பாக அண்மையில் இடம்பெற்றது. (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியைத் தவறவிட்டோரையும் கொஞ்சம் கவனியுங்கள்!!!

**சி.கதீசனா**
3ஆம் வருடம் ஊடகக் கற்கைகள்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கல்வி என்பது குழந்தைகளை, உடல் மற்றும் மன வளர்ச்சியில் அறிவு, நல்லொழுக்கம் ஆகிய மதிப்புடன் வளர்க்க உதவும் ஒரு சமூக அமைப்பு. அறிவு, திறமை போன்றவற்றையும் வழங்கி ஒரு புதிய சமூகத்தை உருவாக்கி பண்பாடு, நடத்தை போன்றவற்றையும் வழங்கி மனிதனை ஒரு முழுமையான ஆற்றல் உள்ள மனிதனாக மாற்றமடைய கல்வி செய்கிறது. கல்வியானது ஒரு சமூகத்துக்கு சமூகம் ஒவ்வொரு மாணவருக்கு மாணவர் வேறுபடும். சிலர் கல்வி கற்பதை விரும்பி ஏற்றுக் கொள்வர், சிலர் கட்டாயத்தின் மத்தியில் ஏற்றுக்கொள்வர், சிலர் சூழ்நிலைகளுக்காக ஏற்றுக்கொள்வர். இவ்வாறாக கல்வி கற்றலில் கற்கும் முறையானது வேறுபடுகிறது.

இலங்கையின் கல்வி முறையானது இலவசக் கல்வி முறையாகும். இலங்கையில் தரம் ஒன்றிலிருந்து தரம் பதினொன்று வரை கல்வி கற்று வரும் மாணவர்களுக்கு தரம் பதினொன்றில் தடை தாண்டல் பரீட்சை என்னும் பெயரில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை என்று நடத்தப்படும். அவற்றில் சித்தி தலைமையை பூர்த்தி செய்த மாணவர் போட்டிப் பரீட்சை என்னும் பெயரில் தன்னுடைய எதிர்காலத்தின் கனவை நோக்கி க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தயாராகின்றனர்.

க.பொ.த. உயர்தர கல்வியானது பிடித்த துறைக்குரிய பாடங்களை தேர்வு செய்து பரீட்சைக்கு தனது கனவுகளோடு தயாராகின்றனர். க.பொ.த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களும் பல்கலைக்கழக அனுமதியை பெற்று விடுவதில்லை. சில சூழ்நிலைகளால், இடையூறுகளால், பல்கலைக்கழக அனுமதியை பெறுவதையோ, பல்கலைக்கழக நுழைவு தகுதிக்கேற்ற பெறுபேற்றைப் பெற்றுக் கொள்வதிலோ, மூன்று பாடங்களில் சித்தி அடைவதிலோ பல பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர்.

பரீட்சைப் பெறுபேறுகள் சிறப்பாக அமைந்துவிட்டால் கொண்டாடித் தீர்க்கும் கல்விச் சமூகம் சித்தியடையாத மாணவர்களைப் பற்றி என்றுமே சிந்திப்பதில்லை. 2023 ஆம் ஆண்டுக்கான உயர்தர பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்ததும் முதனிலை பெற்றவர்களது கருத்துகள் அனைத்து வகையான ஊடகங்களிலும் வெளிவந்திருந்தன. அவை தவறல்ல சரியான விடயம். ஏனெனில் இவ்வாறான பகிர்வுகள் எதிர்கால தலைமுறையினருக்கும் எடுத்துக்காட்டாக காணப்படும். எதிர்கால சந்ததியினருக்கு சிறந்ததொரு வழிகாட்டியாக அவர்கள் திகழ்கின்றனர்

**இவர்களைப் பற்றி சிந்திக்கலாமே?**

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் மற்றும் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைய தவறும் மாணவர்களை அடுத்த கட்டத்துக்கு எவ்வாறு கொண்டு செல்வது? அவர்களுடைய மன உளைச்சலில் இருந்து எவ்வாறு மீட்டெடுப்பது? பற்றி யாருமே சிந்திப்பதில்லை. பாடசாலையோ அல்லது சமூகமோ அவர்களை இரண்டாம் தடவை பரீட்சைக்கு தோற்றுவதற்குரிய முயற்சி எடுப்பது குறைவு என்றே கூறலாம். முதல் தடவை சித்தி அடைய தவறும் மாணவர்கள் பல்வேறு காரணங்களுக்காக அதாவது குடும்பச் சூழ்நிலை, அவமானம், தோல்வி, நண்பர்களின் ஆலோசனைகள், மீண்டும் தம்மை பரீட்சைக்கு தயார்படுத்துவதில் உள்ள சிரமம் போன்றவற்றால் இரண்டாம் தடவையாக பரீட்சை எழுதுவதற்கு விண்ணப்பிப்பதனைக் குறைக்கின்றனர்.

உயர்தர பரீட்சையில் விஞ்ஞான, கணித பிரிவில் இரண்டாம் மூன்றாம் தடவை என மாணவர்கள் முயற்சி செய்து பரீட்சைக்கு தோற்றுகின்றபோதிலும் அவர்களால் மூன்று பாடங்களிலும் சித்தியடைய முடியாத நிலை ஏற்படினும் அவர்களை பேராசையால் அப்பாடத் தெரிவை மேற்கொண்டார்கள், அதற்குரிய தகுதி இம் மாணவர்களுக்கு இல்லை என்று தவறாக விமர்சிக்கும் சமூகம் காணப்படுகிறது.

கலைப்பிரிவு, வணிகப்பிரிவு மாணவர்கள் முதல் தடவை சிறந்த பெறுபேற்றை பெற்றுக் கொள்ள முடியாமல் போயினும் இரண்டாம் மூன்றாம் தடவை பரீட்சைக்கு தயாராவதில் மிகவும் பின்தங்கிய நிலை காணப்படுகிறது.

உயர்தர பரீட்சையின் பெறுபேற்றில் பல்கலைக்கழக அனுமதியை வெட்டுப் புள்ளியே மாணவர்களின் பல்கலைக்கழக உள்வாங்கலைத் தீர்மானிக்கிறது. சிறியதொரு புள்ளியில் பல்கலைக்கழக நுழைவை தவறவிட்ட மாணவர்களும் உள்ளனர். பல்கலைக்கழக அனுமதி பெறாத மாணவர்கள் கல்வியில் பின் தங்கியவர்கள், தேர்ச்சி இல்லாதவர்கள் என்ற தவறான நோக்கத்தை ஒவ்வொரு சமூகமும் தவிர்த்துக் கொள்ளவேண்டும். பல்கலைக்கழக நுழைவைப் பெறாத மாணவர்களோ அல்லது உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியடையாத மாணவர்களோ ஒவ்வொருவரும் தமது தனிப்பட்ட திறமையை கண்டுபிடித்து அவற்றை வெளிக்கொண்டுவர வேண்டும். உயர்தரப் பரீட்சையின் தோல்வியை தடைக்கல்லாக நினைக்காது படிக்கலாக நினைத்து வாழ்க்கையில் வெற்றி அடையவேண்டும்.

நாடெங்கிலும் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களை எத்தனை பேர் உரியவாறு பயன்படுத்தி கொள்கிறார்கள் என்பது ஆய்வுக்குரியதாகும். சாதாரண தரப் பரீட்சையில் சித்தி அடையாது விட்டிருந்தாலும் தொழிற்கல்வி கற்க முடிவு செய்யும் நிலையில் இலங்கையில் 525 தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 13 வருட தொடர்ச்சியான கல்வித் திட்டத்தின் மூலம் அவர்கள் பாடசாலைகளில் இருந்தே தொழிற்கல்வியை தொடரும் திறனைப் பெற்றுள்ளனர். இந்த தொழில்முறை பாடநெறிகள் யாவும் தொழிற்சந்தையை இலக்காக வைத்து வடிவமைக்கப்பட்டுள்ளன. என்.வி.க்யூ 6 சான்றிதழை பெற்ற ஒருவர் வெளிநாடுகளில் பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்க வாய்ப்புள்ளது. மோட்டார் பொறியியல், வெல்டிங், விவசாயம் மற்றும் ஹோட்டல் முகாமைத்துவம் தொழில் உள்ளிட்ட 26 துறைகளை உள்ளடக்கி பாடநெறிகள் நடைபெறுகின்றன.

இவ்வாறான துறைகளை தேடிச்சென்று மாணவர்கள் ஏனைய தலைமுறையினருக்கு எடுத்துக்காட்டாக அமைய வேண்டும். தவறான பழக்க வழக்கங்களில் ஈடுபடுதலோ அல்லது தவறான பாதைகளில் செல்லுதலையோ தவிர்த்து சுயதொழில், வியாபாரம் என அனைத்து துறையிலும் முன்னேற முடியும். உயர்தர பரீட்சையின் குறைவான பெறுபேற்றையோ, சித்தியடையாமையையோ எண்ணி மனவருத்தமடைந்தோ, [illegible] தவறான முடிவு எடுத்தல் [illegible] [illegible] எண்ணங்களையோ கைவிட்டு தவறாக விமர்சிப்பவர்களுக்கு எடுத்துக்காட்டாய் வாழ வேண்டும்.

சித்தி அடைந்த மாணவர்களைப் பாராட்டி பேசும் ஊடகங்கள் சித்தியடையாத மாணவர்களுக்கு உரிய சிந்தனைகளையும் அவர்களுக்குரிய வழிகாட்டுதல்களையும் மேற்கொள்வது சிறந்தது.

யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
33வது வருடாந்தப் பொதுக்கூட்டம்

தலைவர் : பேராசிரியர் சி. சிறிசற்குணராசா
(துணைவேந்தர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழம்)
இடம் : யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
(பேராசிரியர் அ. துரைராசா மண்டபம்)
காலம் : 28.07.2024 ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 9.30 மணி

பழைய மாணவர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.


பழைய மாணவர் சங்கம்
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி
வல்வெட்டித்துறை.

கு.மனோகரன்
செயலாளர்
(077 171 10294)

(CR 42826) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
01
10
1941



மறைவு
14
07
2024

**அமரர் வைரமுத்து தவரத்தினம்**

**(ஓய்வுநிலை உதவி முகாமையாளர்-மக்கள் வங்கி)**

அச்சுவேலியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து தவரத்தினம் அவர்கள் நேற்று (14.07.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து-தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை-பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், தனேஸ்வரியின் அன்புக் கணவரும், தர்சினி, வசந்தினி, தனரஞ்சன் (மக்கள் வங்கி உத்தியோகத்தர்-தெல்லிப்பளை), வரதன் (ஆசிரியர்-யா/வட்டு இந்துக் கல்லூரி), பிரதீபன் (பாதுகாப்பு உத்தியோகத்தர்-மக்கள் வங்கி), பவானந்தினி (Unit Manager-Janasakthi plc), தனரூபன் (ஆசிரியர்-யா/வாதரவத்தை விக்னேஸ்வரன் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயந்திமாலா (ஆசிரியர்-யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), சிவராஜினி (ஆசிரியர்-யா/பண்டத்தரிப்பு ஜெசிந்தா றோ.க.த.க பாடசாலை), சுபாஜினி (அலுவலக உத்தியோகத்தர்-யா/மட்டுவில் சந்திரமௌளீச வித்தியாலயம்), றபித்வஜன் (Janasakthi insurance plc-Regional Sales Manager, Jaffna Capital region), பத்மாஜினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்-தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், துசிந்தா, பர்மிஷா, தர்சஜன், தக்சஜன், தரனீகரன், நிருஷிகன், நிதுர்ஷாஜினி, விருக்சயன், லினுக்சிகா, ஆருத்ரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2024) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அச்சுவேலி வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

தகவல்: குடும்பத்தினர்.
077 659 3396

(CS 945) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போக்குவரத்துச் சட்டம் விரைவில் திருத்தம்

கொழும்பு, ஜூலை 15
தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

குறித்த தகவலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் இதற்கான திருத்தச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

முன்மொழியப்பட்ட திருத்தங்கள் ஊடாகத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் போக்குவரத்து ஒழுங்குபடுத்தல் அதிகாரத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

### அங்கோலா முன்னாள் ஜனாதிபதியின் மகனுக்கு

## 5 ஆண்டுகள் சிறை

நியூயோர்க், ஜூலை 15
அங்கோலாவின் முன்னாள் ஜனாதிபதி ஜோஸ் எடுவார்டோ டோஸ் சான்டோஸின் மகன் ஜோஸ் பிலோமெனோ டோஸ் சான்டோஸுக்கு ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் 5 வருட சிறைத்தண்டனையை அந்நாட்டு உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.



தற்போது 46 வயதான ஜோஸ் பிலோமெனோ டோஸ் சான்டோஸுக்கு 4 வருடங்களுக்கு முன்னர் நீதிமன்றமொன்று 5 வருடச் சிறைத்தண்டனையை விதித்திருந்தது.

ஆனால், மேன்முறையீட்டில், அந்தத் தீர்ப்பு இரத்துச் செய்யப்பட்டது. தற்போது அத்தண்டனை மீள உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 1979 முதல் 2017 ஆம் ஆண்டு வரை 38 வருடங்கள் அங்கோலாவின் ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர் ஜோஸ் எடுவார்டோ டோஸ் சான்டோஸ். அவர் அதிகாரத்திலிருந்து விலகிய பின்னர், அவரின் குடும்பத்தினர் ஊழல் குற்றச்சாட்டு விசாரணைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

அங்கோலா தேசிய வங்கியிலிருந்து பிரிட்டனிலுள்ள வங்கிக் கணக்குக்கு 500 மில்லியன் டொலர் மாற்றப்பட்டமை தொடர்பில் 2017 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஜோஸ் பிலோமெனோவுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டு வழக்கு தொடுக்கப்பட்டது. அவரின் தந்தை ஜனாதிபதி பதவியிலிருந்து விலகுவதற்கு சில வாரங்களுக்கு முன்னர் இப்பணப்பரிமாற்றம் இடம்பெற்றிருந்தது. (ஏ-இ)

### துப்பாக்கி...

ஆட்டைக் காணவில்லை எனத் தேடிச் சென்றபோது பாழடைந்த கிணற்றில் உரப்பை மிதப்பதைக் கண்டு அதனை பிரித்துப் பார்த்தபோதே, துப்பாக்கி ரவைகள் இருந்துள்ளன. இதையடுத்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. அவர்கள் அதை மீட்டுச் சென்றனர். (அ-ஒ-13)

### இலங்கைத்...

வழக்கை எதிர்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் வவுனியாவில் நேற்று நடைபெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவும், கட்சி சம்பந்தமான வழக்கில் சம்பந்தப்பட்ட தரப்பினரும் ஒன்றாகக் கூடி அடுத்த தவணை 19 ஆம் திகதி வழக்கு வரவிருக்கின்ற காரணத்தால் அது குறித்து உரையாடினோம். நாங்கள் ஒவ்வொருவரும் எங்களெங்களது நிலைப்பாட்டுக்கு அமைய மறுமொழிகளைத் தாக்கல் செய்த பின்னர் வழக்கை முடிவுறுத்துவதற்கான ஒரு யோசனை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அந்த யோசனையின் விவரங்களை நாங்கள் மத்திய செயற்குழுவில் கூடித் தீர்மானிப்போம். பொதுவாக வழக்கை எந்த அடிப்படையில் முடிவுறுத்தலாம் என்பது இணங்கப்பட்டிருக்கின்றது. முன்னேற்றகரமான செயற்பாடு கலந்துரையாடலில் இடம்பெற்றது.

எட்டு எதிராளிகளையும் 19ஆம் திகதி வழக்கில் அழைப்பார்கள். கடைசியாக இடையீட்டு மனுவை முன்வைத்த ஜீவராஜா என்பவருடைய இடையீட்டு மனு தொடர்பான விடயமும் 19ஆம் திகதி இருக்கின்றது. அவ்விடயத்தால் வழக்குத் தள்ளிப் போகக் கூடிய சில சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். ஆனால், அதைத் தவிர நாங்கள் அனைவரும் மறுமொழி அணைத்துள்ளோம். இப்பொழுது குடியியல் நடவடிக்கைகள் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தத்துக்கு அமைவாக வழக்கு விளக்கத்துக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னதாக சட்டத்தரணிகள் சகிதம் நீதிபதியோடு ஒரு கலந்துரையாடல் நடத்தப்படவேண்டும் எனச் சொல்லப்பட்டுள்ளது. அந்த இடத்தில்தான் வழக்கை முகமாகத் தீர்க்கக்கூடிய வழிகள் என்ன என்பதை நீதிபதியோடு இணைந்து பேசுவதற்கான ஒரு சந்தர்ப்பம் சட்டப்படியாக இப்பொழுது கொடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 19ஆம் திகதி மறுமொழி வழங்கிய பின்னர் ஒரு திகதியைத் தீர்மானித்து கலந்துரையாடலை மேற்கொண்டு வழக்கை என்ன மாதிரி முடிவுறுத்தலாம் என்ற தீர்மானத்துக்கு வரலாம். அதற்கு முன்னர் மத்திய செயற்குழு கூடி எடுக்கப்போகும் தீர்மானம் தொடர்பாகக் கலந்துரையாடி இணக்கப்பாட்டைத் தெரிவிக்கும்.

அத்தோடு, வழக்குகள் நீதிமன்றத்தில் இருப்பதன் காரணத்தால் தமிழரசுக் கட்சி செயற்பட முடியாமல் இருக்கின்றது. நீதிமன்றத்தில் முடங்கிக் கிடக்கின்றது. கட்சியினுடைய சின்னத்தைப் பாவிக்க முடியாமல் இருக்கின்றது. தேர்தல் வந்தால் என்ன செய்வார்கள்? என்றெல்லாம் பலர் நீலிக்கண்ணீர் வடிக்கின்ற விடயம் நடந்துகொண்டிருக்கின்றது. கட்சி முடக்கப்படவில்லை. கட்சியினுடைய செயற்பாடுகள் எதுவும் முடங்கவில்லை. கட்சியின் சின்னம் முடக்கப்படவில்லை. கட்சி முழுமையாகச் செயற்பட்டுக் கொண்டே இருகின்றது. கட்சியின் சின்னத்தின் கீழ் எந்தத் தேர்தலையும் நாம் சந்திக்க முடியும். அதற்கு எந்தவிதமான இடர்பாடுகளும் கிடையாது.

வழக்கில் நிறுத்தப்பட்டிருப்பது கட்சியின் தெரிவுகள். கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற தெரிவுகள் நடைமுறைப்படுத்தக் கூடாது என்று ஒரு தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது. அதனுடைய பிரதிபலன் என்னவென்றால் அதற்கு முன்னிருந்த தலைவர், செயலர், நிர்வாகிகள் கட்சியினுடைய செயற்பாட்டை முன்னெடுக்க முடியும். அதற்கு எந்தவிதமான தடையும் கிடையாது" - என்றார். (அ-ஒ-இ)

### சிறுவர்களிடையே...

இவ்வாறாக சிறுவர்களுக்கு ஆஸ்துமா ஏற்பட வாய்ப்பு உள்ளது. தூசி அதிகம் உள்ள வீடுகளிலும், புகைபிடிக்கும் பெரியவர்கள் வசிக்கும் வீடுகளிலும் உள்ள சிறுவர்களுக்கு இவ்வாறு ஆஸ்துமா நோய் ஏற்படும் அபாயம் அதிகமாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் இந்த நிலைமை தொடர்பில் அச்சமடையத் தேவையில்லை என்றும் முறையான சிகிச்சையின் மூலம் இதனைக் குணப்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை - ஒரு வாரம் அல்லது இரண்டு வாரங்களுக்கு மேலாக இருமல் நீடிக்குமாயின், மருத்துவரை நாடி சிகிச்சைகளைப்பெற்றுக்கொள்ளவேண்டும். சில நேரங்களில் இது சயரோகத்துக்கான அறிகுறிகளாகவும் காணப்படக்கூடும் எனவும் சிறுவர் மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

### தமிழ்த்...

என்ற பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கு இணக்கப்பாட்டை எட்டியுள்ள நிலையில் கடந்த 6ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சம்பந்தனின் மறைவையொட்டி குறித்த புரிந்துணர்வு உடன்பாட்டு நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் தற்போது ஒத்திவைக்கப்பட்ட இந்த கைச்சாத்திடும் நிகழ்வை நாளைமறுதினம் முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

### இந்திய...

முன்னெடுக்கப்பட்டு வரும் உட்கட்டுமானமற்றும்அபிவிருத்தித்திட்டங்களின் நிலை குறித்துக் கண்டறிவதற்காக இந்தப் பயணம் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கத்தின் உயர்மட்ட பிரதிநிதிகள் மற்றும் துறைசார் நிபுணர்கள் இந்தப் பயணத்தில் இணைந்துகொள்ள உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-ஒ-இ)

### மக்கள்...

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு, இந்த இறுதி அறிவிப்பை வெளியிட்டுள்ளது. நாடாளுமன்ற செயலர் மற்றும் ஜனாதிபதியின் செயலர் ஆகியோருக்கு இது தொடர்பில், ஆணைக்குழு கடிதம் எழுதியுள்ளது.

அதில், இதுவரையில் தமது சொத்துகள், பொறுப்புகள் மற்றும் கடன் பிரகடனங்களைக் கையளிக்காத நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் பெயர்ப் பட்டியலைச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தங்கள் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய அறிவிப்புகளைச் சமர்ப்பிக்காதவர்களின் சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்குக்கு கூடுதல் கட்டணம் விதிக்க, இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

### திருமலையில்...

சாரதிக்கு நித்திரைக் கலக்கம் ஏற்பட்டதன் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும், காயமடைந்தவர்கள் ஹொரவப்பொத்தான பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த பெண் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரே குடும்பத்தினர் திருகோணமலைக்கு தனிப்பட்ட தேவைக்காகச் சென்ற போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ-ஒ-இ)

### முச்சக்கரவண்டி...

அதற்கமைய இரண்டாவது கிலோமீற்றருக்காக இதுவரை அறவிடப்பட்ட 100 ரூபா என்ற பயணக் கட்டணம் 90 ரூபாவாகக் குறைக்கப்படவுள்ளது. (அ-ஒ-இ)

### தேர்தல்கள்...

அரசமைப்புக்கு அமைவாக நாளை நள்ளிரவு 12 மணிக்கு பின்னர் ஜனாதிபதித் தேர்தலுக்கான தினத்தை அறிவிப்பதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெறவுள்ளது. அதே போன்று அரசமைப்புக்கு அமைய ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு முன்னர் புதிய ஜனாதிபதியின் பதவியேற்பு நிகழ்வுகளும் நிறைவடைந்திருக்கவேண்டும்.

இந்த நிலையிலேயே தேர்தல்கள் ஆணைக்குழு நாளை முக்கியமான அறிவிப்பை நாட்டு மக்களுக்கு வெளியிடவுள்ளது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத்தை நெறிப்படுத்தும் ஆசான்கள் ஊடகங்களே

## இந்து சமய பேரவை தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 15

ஊடகங்கள் சமுதாயத்தை நெறிப்படுத்தும் ஆசான்களே. அவ்வூடங்கங்கள் அமைந்திருக்கும் இடங்கள் ஆலயத்துக்கொப்பானதே. அவற்றைப் பாதுகாப்பது மக்களின் தலையாய கடனாகிறது. சைவனாகப் பிறந்தவன் வேதசிவாகமங்களுக்கமைவாக நடப்பதோடு அந்தந்த நாட்டுச் சட்டங்களுக்கும் அமைவாக நடந்து கொள்ள வேண்டும் என்றுகூறி ஜெகத்குருசங்கரா சார்ய சுவாமிகள் இந்துக்களை சரியான முறையில் வாழவேண்டுமென நெறிப்படுத்தி பல சாதனைகளை உலகில் செய்துள்ளார். இதனை எமது சமுதாயம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

இவ்வாறு யாழ்ப்பாணம் இந்து சமயப்பேரவையில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட பேரவைத் தலைவர் ஈசான சிவசக்தி கிரீவன் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-


ஒவ்வொரு மதத்தவரும் நாட்டின் பொதுவிதிகளைப் பேணுவதோடு தத்தம் மதங்கள் கூறும் விதிமுறைகளையும் பேணவேண்டும். நாம் சிறுபராயமாகவிருக்கும்போது ஆசிரியர்களும் பெற்றோர்களும் எம்மை நெறிப்படுத்துகின்றனர். நாம் பயபக்தியோடே அதைக்கேட்டு நடந்து கொள்கின்றோம். அவர்கள் மது அருந்துபவர்களாகவோ தீயபழக்க வழக்கங்கள் உள்ளவர்களாகவோ இருக்கலாம். இந்த விடயத்தில் நாம் ஒருபோதும் அவர்களைக் கேள்வி கேட்பதில்லை. எந்தவொரு விடயத்திலும் தவறுகள் திருத்தப்பட வேண்டியவையே. அவற்றை நியாயப்படுத்த ஒருபோதும் வரிந்து கட்டிக்கொண்டு நிற்கக்கூடாது.

ஊடகங்கள் எமது சமூக நலனுக்கான கருத்தாங்கங்களை அள்ளி வீசுகின்றபோது அவர்கள் எமக்காக அனுபவித்த துன்பங்களெத்தனை. அதற்காக எத்தனை கோடி கொடுத்தாலும் ஈடாகாது. இதுவொருபுறமிருக்க சிலவூடகங்கள் நல்லவாக்கங்களை வெளியிடுகின்றபோதும் சில மோசடிக்களவாணிகளுக்கு அளவுக்கதிகமானா ஆதரவு வழங்கி மக்களையும் திசைதிருப்புவதை மிகவன்மையாகக்கண்டிக்கின்றேன்.

நல்லபலவாக்கங்களை வெளியிடுகின்ற சில வூடகங்கள் அதேநேரம் தமது சுயநலன்கருதி தேனீக்கள் போல் பூவிலுள்ள மகரந்தத்தையும் தேனையும் உறிஞ்சுவது போன்று செயற்படும் மோசடிக்காரர்களுக்கு மகுடம் சூட்டிக் குஞ்சம் கட்டுவதை சமூகப்பொறுப்புள்ள என்னால் ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இதற்காக மதக்குரோத வெறித்தனத்தையும் தூண்டி விடுவது மகாபாதகமானது. ஊடகங்கள் சாமானிய மனிதனைப் படித்தபண்பாளனாக்கவேண்டும். படித்தவனை பண்டிதனாக்கவேண்டும். பண்டிதனை ஞானியாக்கவேண்டும். அதேநேரம் எமது சமூகத்திற்கு பீடித்துள்ள அநீதியான செயற்பாடுகளைத் திருத்தும் உணர்வோடு கருத்தாக்கங்களை தேடித்தேடி அள்ளிச் சொரியவேண்டும். கள்ளர்களின் குகையைப்பாதுகாக்க மரங்களுக்குக் கீழே கூடிக்கலைவதால் என்னதான்வந்து விடப்போகிறது.

சமூகப்பொறுப்பில்லாது எந்த ஆக்கத்தை வெளியிட்டாலும் அது குளிக்கப்போய் சேறு பூசிய கதையாகி விடும். ஆதலால் அன்புள்ள அனைத்தூடகத்தாரும் சமூகப்பொறுப்போடு செயற்பட இன்றே உறுதிபூணுங்கள் - என்றார். (ஒ-இ)

# இனவாதத்தை ஒழித்தாலே இலங்கை மீட்சி அடையும்!



## தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 15

**இனவாதம் மற்றும் மதவாத அரசியலை முழுமையாக இல்லாதொழித்து அனைத்து இன மக்களையும் ஒன்றிணைக்கும் கொள்கை வகுக்கப்பட்டாலே நாட்டைக் கட்டியெழுப்பமுடியும்.**

- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க அம்பாறையில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண போர்க் குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில் தற்போது பொருளாதாரக் குற்றச்சாட்டும் சர்வதேச அரங்கில் முன்வைக்கப்பட்டுள்ளது. இனவாதத்தின் ஊடாக அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள அரசாங்கம் எத்தணித்ததாலேயே இறுதியில் முழுநாடும் பொருளாதாரப் பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. வாங்கிக் கடனை செலுத்தமுடியாத ஒரு நாடாக நாங்கள் இருக்கிறோம். தொழில் வல்லுநர்களுக்கு இலங்கையைவிட்டு வெளியேறவேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இந்த நாட்டைக் கட்டி எழுப்பவேண்டும் என்றால் நாங்கள் இனவாதத்தை தோற்கடிக்கவேண்டும். தேசிய ஒற்றுமையை நாங்கள் உருவாக்கவேண்டும் - என்றார். (ச)

# குத்திக்கொலை

கொழும்பு, ஜூலை 15

தேங்காய் உரிக்கும் கருவியால் குத்திக் கொலை செய்த நபர் ஒருவர் ரத்கம, ரணபனாதெனிய பிரதேசத்தில் நேற்று மாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரத்கம, கனேகொட, வலகட பகுதியைச் சேர்ந்த 49 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தடல்லகே விமலசேன பிரதேசத்தைச் சேர்ந்த நபரே சம்பவத்தில் உயிரிழந்தார்.

இந்தக் கொலைச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகவும், அன்று இரவு 7 மணியளவில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதாகவும் ரத்கம பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் ரத்கம, ரணபனதெனிய பிரதேசத்தில் இரண்டு ஏக்கர் தென்னங்காணியின் உரிமையாளராவார்.

இறந்தவருடன் அவரது தாயும் அவரது தாயாரின் சகோதரியும் வசித்து வருவதாகவும், இறந்தவரின் மனைவி மற்றும் பிள்ளைகள் டுபாயில் வசித்து வருவதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இறந்தவருக்குச் சொந்தமான தென்னங் காணியில் சந்தேகநபர் 10 தேங்காய்களைப் பறித்து விற்பனை செய்ததாகவும் அது தொடர்பில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே கொலைவரை சென்றுள்ளதாகவும் ரத்கம பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஒ-இ)

# துஷ்பிரயோகம்; ஆசிரியர் கைது

கொழும்பு, ஜூலை 15

ஹன்வெல்ல பிரதேசத்தில் சிறுமிகளை தவறான நடத்தைக்கு உட்படுத்தும் வகையில் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் நடன வகுப்பு ஆசிரியர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். 38 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர், நடன வகுப்புக்கு வந்த சிறுமிகளிடம் தகாத முறையில் நடந்து கொண்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 15

உரும்பிராய் ஞானவைரவ கோவிலடி சனசமூக நிலையத்தின் முழுநிலா கருத்தரங்கு எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை சனசமூக நிலைய மேல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. 'தற்போதைய மனித உரிமைப் பிரச்சினைகளும் தொடர்புடைய சட்டங்களும்' என்னும் தொனிப்பொருளில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் கருத்துரை வழங்கவுள்ளார். (ஒ-இ)

# பறவைகளை பின்தொடர்வோம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

இயற்கை ஊக்குவிப்பு கழகம் மற்றும் யாழ்ப்பாண பூச்சியல் சங்கத்தின் ஏற்பாட்டில் 'பறவைகளை பின் தொடர்வோம்' என்ற தொனிப்பொருளில் பயண வழி கற்றல் செயற்பாடு நாளை பி.ப. 4.30 இற்கு வல்லையில் முன்னெடுக்கப்பட வுள்ளது.

பங்குபற்றுநர்கள் இயற்கையுடன் ஒத்த ஆடைகளை அணிந்து பங்கு பற்றவேண்டும் என்பதுடன் 077 265 8002 என்ற இலக்கத்துக்கு வரவை உறுதிப்படுத்துமாறும் ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (ஒ-இ)

# அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை மும்மடங்கு

கொழும்பு, ஜூலை 15

அரசாங்கம் மீதான மக்களின் அங்கீகாரம் மூன்று மடங்காக அதிகரித்துள்ளதாக வெரிட்டே ரிசேர்ச் நிறுவனம் ஆய்வினூடாகத் தகவல் தெரிவித்துள்ளது.

நான்கு மாதங்களுக்கு முன்னர் இருந்ததைவிட இந்த நிலை உயர்ந்துள்ளது. குறிப்பாக, பொருளாதாரம் மற்றும் நாட்டின் பொருளாதாரப் போக்கு தொடர்பான விடயத்தில் அரசாங்கத்தின் மீது மக்கள் நம்பிக்கையை உணர்வதாகவும் இந்த ஆய்வினூடாகத் தெரியவந்துள்ளதாகக் கூறப்படுகிறது. (ச-இ)

**வேலைக்கு ஆள் தேவை**

எமது கால்நடை உற்பத்தி விற்பனை நிலையத்திற்கு பெண் வேலையாள் தேவை. (திருநெல்வேலிக்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)

JAFFNA EGG CENTER

தொடர்பு: 075 258 9665
077 851 1265

**காணி, வீடு விற்பனைக்கு உண்டு**

கோப்பாய் தெற்கு கிராம சபை ஒழுங்கையில் கிராம சேவையாளர் பிரிவு J/260 நில.பர.3 குளி 8.50 அளவுள்ள காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு

077 9672 152
077 9024 248

**வங்கி மீதி வசதி (SHOW MONEY)**

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:

074 173 7684

(CS/55548) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.